Asian Network for Free Elections

**Asian Network for Free Elections (ANFREL Foundation)**
105 Sutthisanwinichai Rd., Samsennok, Huai Khwang, Bangkok 10310, Thailand
Tel: +66 2-693-1867, +66 2-277-6678 / Fax: +66 2-694-3228
*Email: anfrel@anfrel.org / Website: www.anfrel.org*

# ANFREL அமைப்பானது இலங்கையில் ஜனநாயக முக்கியத்துவத்தை ஊக்குவிக்கும் முகமாக சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களை 2019 ஜனாதிபதித் தேர்தலில் ஈடுபடுத்தியுள்ளது.

ஊடக அறிக்கை
கொழும்பு, இலங்கை
ஒக்டோபர் 23, 2019

சுதந்திரமான தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பு (ANFREL), இலங்கையின் 2019 வருட ஜனாதிபதித் தேர்தலில் அதன் சர்வதேச தேர்தல் கண்காணிப்பு பிரதிநிதிகளை ஈடுபடுத்துவது பற்றி அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது. இலங்கையிலான இந்த ஈடுபடுத்துதல், 2001 இலிருந்து நாட்டில் நடத்தப்பட்ட 10 முன்னைய தேர்தல்களில் ஸ்தாபனத்தின் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளை அடியொற்றியதாக அமைகிறது. 16 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 41 தொழில்சார் ரீதியான தேர்தல் கண்காணிப்பாளர்களைக் கொண்ட ANFREL இன் கண்காணிப்பு அணி, ஒக்டோபர் 23, 2019 இலிருந்து நாட்டிற்கு வருவதற்கு ஆரம்பிப்பார்கள்.

உலகிலுள்ள சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களுள் மிகவும் அனுபவம் கொண்டவரான, பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்தவரான திரு. டாமஸோ மக்புவல் (Mr.Damaso Magbual) என்பவரால் இவ்வணி தலைமை தாங்கப்படும். ஜனநாயக நெறிகள் மற்றும் சிறந்த தேர்தல் நடைமுறைகள் என்பவற்றை முன்னேற்றும் நோக்கத்தோடு, 4 முக்கிய உறுப்பினர்களை கொண்ட 2 தேர்தல் பகுப்பாய்வாளர்களை உள்ளடக்கிய, 9 நீண்ட கால கண்காணிப்பாளர்கள், மற்றும் 28 குறுகிய கால கண்காணிப்பாளர்களை கொண்ட இவ்வணி நாடு முழுவதிலுமாக அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாய் தேர்தலில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடன் தொடர்புபடுவார்கள். ஒதுக்கப்பட்ட பகுதிகளில் அவர்களை ஈடுபடுத்துவதற்கு முன்னதாக, ANFREL கண்காணிப்பாளர்கள் ஒரு விளக்கத்தினை கொழும்பில் பெற்றுக் கொள்வார்கள்.

2019 ஜனாதிபதித் தேர்தலிற்காக, இலங்கை தேர்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆசியாவின் ஒரேயொரு சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனம் ANFREL ஆகும். சர்வதேச தேர்தல் கண்காணிப்புக்கான கோட்பாடுகளின் பிரகடனம் மற்றும் நடத்தைக் கோவை என்பவற்றுடன் இணங்குவதற்கு, கட்டமைக்கப்பட்ட ANFREL இன் ஒரு முறைமையினால் கண்காணிப்பு அணி வழிநடத்தப்படும்.

நாட்டில் தேர்தல் செய்முறைகளின் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை மேம்படுத்துவதன் மூலம் இலங்கையில் ஜனநாயகத்திற்கான அடித்தளத்தை மேலும் வலுப்படுத்துவதற்கும், அவ்வாறே சர்வதேச ஜனாநயகக் கோட்பாடுகளை ஒருங்கிணைப்பதை முன்னேற்றுவதற்கு பங்களிப்பதற்கும் ANFREL எண்ணுகிறது. இந்த இலக்குகளிற்கு உதவுவதற்கு, ANFREL இன் தேர்தல் கண்காணிப்பு அணி ஆசியா முழுவதிலுமிருந்து சுயாதீனமான ஜனநாயக மற்றும் மனித உரிமைகளை மையமாகக் கொண்ட ஸ்தாபனங்களிலிருந்தே பெரிதும் வருகின்றனர். அவ்வகையில், சுதந்திரமானதும் மற்றும் நீதியானதுமான தேர்தல்களுக்கான பாங்கொக் பிரகடனம் (Bangkok Declaration) மற்றும் ஆசிய ஜனநாயகப் பாரம்பரியங்களைப் பிரதிபலிக்கும், ஜனநாயகத் தேர்தல்களின் டிலி (Dili Indicaters) குறிக்காட்டிகள் போன்ற கருவிகளை ANFREL உபயோகிக்கும்.

Asian Network for Free Elections (ANFREL Foundation)
105 Sutthisanwinichai Rd., Samsennok, Huai Khwang, Bangkok 10310, Thailand
Tel: +66 2-693-1867, +66 2-277-6678 / Fax: +66 2-694-3228
Email: anfrel@anfrel.org / Website: www.anfrel.org

இந்த ஈடுபடுதல்கள் மூலமாக, மக்களின் விருப்புகளிற்கான முன்னுரிமை, சமனான போட்டிக் களம் மற்றும் அடிப்படை மனித உரிமைகளுக்கு ஊக்கமான தேர்தல் சூழல் என்பவற்றை உறுதிப்படுத்தும் ஒரு நேர்மையான தேர்தல் செய்முறையை அவதானிப்பதற்கு ANFREL எண்ணுகிறது. முழுத் தேர்தல் செய்முறையும் கூடுதல் வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும் மக்களிற்கு அணுகும் வழி கொண்டதாகவும் அமைவதற்கு கண்காணிப்பாளர்களின் பிரசன்னம் உதவுதற்கு முடியுமென ANFREL நம்புகிறது. இலங்கை தேர்தல் ஆணைக்குழு, உள்ளூர் சிவில் சமூக அமைப்புக்கள், ஏனைய தேர்தல் ஆர்வம் கொண்டவர்கள், மற்றும் மிக விசேடமாக இலங்கை மக்களுடன் பயனுள்ள ஈடுபாட்டினைத் தொடர்வதற்கு கண்காணிப்பு அணி எதிர்பார்க்கிறது.

###

*1997 நவம்பரில், உருவாக்கப்பட்ட, சுதந்திர தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பு (ANFREL) தேர்தல்கள் மற்றும் ஜனநாயக முன்னேற்றுதல் தொடர்பாக செயலாற்றும் ஆசியாவின் பிரசித்தமான பிராந்திய அரச சார்பற்ற ஸ்தாபனமாக தன்னை ஸ்தாபித்துக் கொண்டுள்ளது. ANFREL தேர்தல் கண்காணிப்பு, மற்றும் அதே போன்று தங்களது தாய் நாடுகளில், ஜனநாயகப்படுத்துதல் தொடர்பாக ஆர்வத்தோடு பணியாற்றும் தேசிய சிவில் சமூக ஸ்தாபனங்கள் மற்றும் தேர்தல் முகாமைத்துவ அமைப்புகள் என்பவற்றுக்காக செயற்றிறனைக் கட்டியெழுப்புதல் என்பவற்றில் கவனம் செலுத்துகிறது. அதன் உருவாக்கத்திலிருந்து, ஆசியா முழுவதிலுமாக 17 நாடகளில் 65 இற்கு மேற்பட்ட தேர்தல்களில் ANFREL செயலாற்றியுள்ளது. வெளியக ரீதியாக அமுல்படுத்தப்படுகின்றதிற்குப் பதிலாக உள்நாட்டில் விருத்தி செய்யப்பட்டதாகக் காணப்படுகின்ற ஒரு ஜனநாயகக் கலாசாரத்தை ஸ்திரப்படுத்தி, பிராந்தியத்தில் தேர்தல்கள் மற்றும் ஆளுகை தொடர்பில் நிபுணத்துவத்தைக் கட்டியெழுப்புவது எங்களது நீண்ட கால இலக்காகும். ஏனைய நாடுகளிலான தேர்தல்கள் கண்காணித்தல் மூலம், சர்வதேச ரீதியாக சிறந்த நடைமுறைகளை - தங்களது சம்பந்தப்பட்ட தாய் நாடுகளில் பிரயோகிக்கப்படக்கூடியதான அறிவின் ஓர் உறுதியான புரிந்து கொள்ளுதல்களை, எங்களது கண்காணிப்பாளர்கள் விருத்தி செய்து கொண்டுள்ளனர். எங்களைப் பற்றி மேலும் அறிந்த கொள்வதற்கு www.anfrel.org.எனும் இணையத்தளத்தைப் பார்க்கவும்.*